அழைத்திருப்பதால், அங்கே பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இதைப் பற்றி விவரமாக விவாதிக்க, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானமும், முன்பு பேசிய ஒத்திவைப்புத் தீர்மானத்தின் அடிப்படையிலே அமைந்திருக்கிறது. இதிலே என்ன நடைபெற்று விட்டதென்றால், அங்கே இருந்த மின்சாரத் தொழிலாளி, தானாகவே போய் டிஸ்-கனெக்ட் செய்து விட்டார். நாம் கொடுத்த அறிவிப்பு அங்கே போய்ச் சேருவதற்கு முன்னாலேயே இது நடைபெற்று விட்டது. இது சம்பந்தமாக அப்படிச் செய்யக் கூடாது என்ற அடிப்படையில் மின் வாரியத்திற்கு, அவர்கள்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம். இதைத்தான் மாண்புமிகு லத்தீப் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். ஆகவே, இனிமேல் இத்தகைய காரியங்கள் வராமல் பார்த்துக் கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற அடிப்படையில், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, விவாதிக்கத் தேவையில்லை என்று கூறி அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(5) கவன ஈர்ப்புகள்.

(அ) கிருஷ்ணகிரி நீர்த்தேக்க பாசன நிலங்களுக்கு அதிகமாக தண்ணீர்த் தீர்வை விதிக்கப் பெறுவது குறித்து.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்திலிருந்து பாசன வசதி பெறும் நிலங்களுக்குத் தண்ணீர் தீர்வையுடன் கூடிய அதிகத் தொகை தீர்வையாக விதித்ததால் நிலவும் பதட்ட நிலை குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி நீர் தேக்கத் திட்டத்தின் மூலம் பாசன மடையும் நிலங்களுக்கு வழக்கமாக விதிக்கப்படும் தண்ணீர்த் தீர்வை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 15 ஆகும். 1967ஆம் ஆண்டு கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்ட பாசன நீட்டிப்பு மேல்வரி விதிகளின் கீழ் ஒவ்வொரு ஆண்டிலும் ஆகஸ்டு திங்கள் முதல் தேதி டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி வரையிலான கால அளவே குறுகிய கால நெல் பயிரிடுவதற்கான இயல்பான பாசனக் காலம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பாசனத் திற்குத் தண்ணீர் விடுவது நிறுத்தப்படக் கூடிய நாளுக்கு, அதாவது, ஓராண்டின் டிசம்பர் திங்கள் 31ஆம் தேதிக்குப் பின்னர் தண்ணீர் திறந்து விடப்பட்டு அதன் மூலம் பயனடைகின்ற நிலங்களுக்கு, வரையறுக்கப்பட்ட வீதத்தில், பாசன நீட்டிப்பு மேல்வரி என்னும் வரி விதிக்கப்பட வேண்டி யுள்ளது. வரையறுக்கப்பட்ட, படிப்படியான பாசன நீட்டிப்பு மேல்வரி வீதங்கள் பின்வருமாறு:—

(1) டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதிக்குப் பின்னர் தண்ணீர் திறந்துவிடப்பட்ட முதல் ஆண்டுக்கு.	இயல்பான தண்ணீர்த் தீர்வையைப் போல் 2 மடங்கு (ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 30).
(2) இரண்டாம் ஆண்டுக்கு	..	4 மடங்கு (ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 60).
(3) மூன்றாம் ஆண்டுக்கு	..	8 மடங்கு (ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 120).
(4) நான்காம் ஆண்டுக்கு	..	16 மடங்கு (ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 240).
(5) ஐந்தாம் ஆண்டுக்கு..	..	20 மடங்கு (ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300).
(6) ஆறாம் ஆண்டுக்கும், அதற்கு அடுத்தடுத்து வரும் ஆண்டு களுக்கும்.		30 மடங்கு (ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 460).

2. 1377-ம் பசலியிலிருந்தே கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் விடப்படுவதாலும், 1382-ம் பசலி ஆண்டை முதலாவது பாசன ஆண்டாகக் கருதுமாறு ஏற்கனவே 1974-ல் இடப்பட்ட ஆணைகளின்படிக் கூட, இப்பொழுது விவசாயிகள் அதிக அளவு நீட்டிப்பு மேல்வரி கட்ட வேண்டியிருப்பதாலும் கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தினால் பயனடையும் விவசாயிகளுக்கு பின்வரும்

1979 மார்ச் 27] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

சலுகைகள் அளிக்க முடிவு செய்து ஆணை 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 18-ம் நாளில் பிறப்பிக்கப்பட்டுள்ளது :—

(i) 1382 ஆம் பசலி ஆண்டிற்கு இயல்பான தண்ணீர்த் தீர்வையைப்போன்று இரு மடங்கு வீதத்தில் அதாவது ஏக்கர் ஒன்றுக்கு 30 ரூபாய் என்ற வீதத்திலும் 1383, 1384 ஆம் பசலி ஆண்டுகளுக்கு சாதாரணமாக விதிக்கப்படும் தண்ணீர் தீர்வையைப் போன்று நான்கு மடங்கு, அதாவது ஏக்கர் ஒன்றுக்கு 60 ரூபாய் என்ற வீதத்திலும் 1974 நவம்பர், 1975 டிசம்பரில் ஆணையிடப்பட்டது போலவே நீட்டிப்பு மேல்வரியாக விதிக்கப்பட வேண்டும்.

(ii) கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டத்திலிருந்து வழங்கப்படும் தண்ணீரைக்கொண்டு விளைவிக்க அனுமதிக்கப்பட்ட இரண்டாவது பயிருக்காக 1385, 1386, 1387 ஆம் பசலி ஆண்டுகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 60 ரூபாய் வீதம், அதாவது சாதாரண தண்ணீர் தீர்வையைப் போன்று நான்கு மடங்கு வீதத்தில், நீட்டிப்பு மேல்வரி விதிக்கப்பட வேண்டும். கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்ட நீட்டிப்பு மேல்வரி விதிகளின் கீழ் விதிக்கத்தக்க எஞ்சிய வரி சிறப்பு நேர்வாகத் தள்ளிவிடப்பட வேண்டும்.

3. எனவே, மேற்குறிப்பிட்ட உத்தரவிற்கு இணங்க 1967 ஆம் ஆண்டு கிருஷ்ணகிரி நீர்த்தேக்க திட்டப் பாசன நீட்டிப்பு மேல்வரி விதிகளின் கீழ் விவசாயிகள் செலுத்த வேண்டிய பாசன நீட்டிப்பு மேல்வரி கீழ்கண்டவாறு குறைக்கப் பட்டுள்ளது :—

பசலி.	விதிகளுக்கிணங்க செலுத்த வேண்டிய வரித் தொகை.	அரசாணை எண் 1937 வருவாய், நாள் 1978 ம் வருடம் ஆகஸ்டு திங்கள் 18-ம் நாள் படி செலுத்த வேண்டிய வரித் தொகை.
(1)	(2)	(3)
	ரூ.	ரூ.
1382 ..	450	30
1383 மற்றும் 1384 ..	450	60
1385 முதல் 1387 வரை	450	60
		(மீதி வரித் தொகை தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 மார்ச் 27

4. தண்ணீர்த் தீர்வை வீதங்களைச் சீர் செய்வது குறித்து 1977-ல் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை வந்த பின்னர் 1388-ஆம் பசலி ஆண்டிற்கும், அடுத்துவரும் பசலி ஆண்டு களுக்கும் நீட்டிப்பு மேல்வரி விதிப்பது பற்றிப் பரிசீலிக்கப் படும்.

டாக்டர் கே. சமரசம்: 1967ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. 1974-ல் அமலுக்கு வந்து அந்தப் பகுதி மக்கள் எவ்விதம் பாதிக்கப்பட்டார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. 1382-ம் பசலிக்கு 30 ரூபாய், 1383, 1384 பசலிக்கு 60 ரூபாய்; அதே போன்று 1385, 1386, 1387 பசலிக்கு முறையே 60 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இன்றையதினம் தமிழ கத்தில் மற்ற பல அணைக்கட்டுத் திட்டங்களிலிருந்து தண்ணீர் பெறக்கூடிய விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய வரியை விட கிருஷ்ணகிரியிலிருந்து தண்ணீர் பெறுகிற விவசாயிகளுக்கு வரி அதிகமாக இருக்கிறது. கிருஷ்ணகிரி அணையிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் பெறும் விவசாயிகளுக்கும் வரியை குறைந்த அளவில் சீரமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சமரசம் அவர்கள் அங்கிருக்கக்கூடிய விவசாயிகளுடைய சங்கடங்களைப் பற்றிக் கூறும்போது அடேயப்பா 20 மடங்கு, 30 மடங்கு அதிகமாக வரி இருக்கிறது என்று என்னிடத்திலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர் களிடத்திலும் பேசியிருக்கிறார்கள். ஏழை விவசாயிகள் அதை எப்படித் தாங்குவார்கள் என்று தமிழக முதல்வர் அவர்களிடத் திலேயே பேசியிருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் 450 ரூபாய் என்று இருந்ததை 30 ரூபாய், 60 ரூபாய், 60 ரூபாய் என்று குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். டாக்டர் சமரசம் அவர்களு டைய உணர்வுகளைப் புரிந்து கொண்டிருக்கிறோம். விவசாயி கள் நலன்கள் கருதி ஒரு ஒழுங்கு முறை கொண்டு வரப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.